**World Christian Fellowship**
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# ஆபகூக் புஸ்தகம்

**பெயர் பொருளடக்கம்** : *ஆபகூக் என்ற பெயர் "தழுவுதல்' (Clinger) அல்லது "போராடுதல்/ மல்யுத்தம் செய்தல்" என்று பொருள்படும். வழக்கமாக இதுவரை பார்த்ததுபோல, இந்த பெயருக்கும் இந்த புத்தகத்தில் சொல்லப்படும் செய்திக்கும் சம்பந்தம் இருக்கிறது. இந்த தீர்க்கதரிசனத்தின் முடிவிலே இப்பெயரின் பொருள் நமக்கு புரிகிறது. ஏனெனில், தம்முடைய ஜனங்களுக்கான தேவனுடைய திட்டம் என்ன என்று அறியாமல் குழம்பிப்போய் இருந்தாலும், இந்த தீர்க்கதரிசி ஆண்டவரை பற்றிக்கொள்கிறார்.*

**எழுதிய வருடம்** : *கி.மு. 609 - கி.மு.586-க்கு இடைப்பட்ட காலத்தில் யோசியா இராஜா இறப்பிற்கு பின்னர் இந்த புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம்.*

*கல்தேயரைப் (பாபிலோன்) பற்றி குறிப்பிட்டிருப்பதால் கி.மு. 7ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். இதற்கு சற்று முந்தைய காலத்தில்தான் நேபுகாத்நேச்சார் எருசலேமை (605 கிமு) நோக்கி, நினிவே (612 கி.மு.), ஆரான் (609 கி.மு.) மற்றும் கார்கெமிஷ் (605 கி.மு.) வழியாய் தன்னுடைய இராணுவ அணிவகுப்பை தொடங்கினார். யோசியா ராஜா மரித்த பிறகு (609 B.C.), அவர் கொண்டுவந்த சீர்திருத்தங்கள் (2 இராஜா 23) யாவும் யோயாக்கீம் ராஜாவினால்*

*புறக்கணிக்கப்பட்டு தலைகீழாய்போயின (எரேமியா 22:13–19). இந்த காலகட்டத்தைத்தான் ஆபகூக் (1:2–4) வசனங்களில் கூறி கசந்து புலம்புகிறார்.*

**வரலாற்று பின்னணி** *:*

*அசீரிய சாம்ராஜ்யத்தின் கடைசி காலத்தில் ஆபகூக் தீர்க்கதரிசனம் உரைத்தார். இந்த காலத்தில்தான் நாபபொலாசார் (Nabopolassar) மற்றும் அவனது மகன் நேபுகாத்நேச்சாரின் (Nebuchadnezzar) கீழ் பாபிலோனிய சாம்ராஜ்ஜியம் உலகெங்கும் பரவ தொடங்கியிருந்தது.*

*நாபபொலாசார் கி.மு 626ல் தன் தேசத்தில் அரசனானான். உடனே, வடக்கிலும் மேற்கிலும் அவனுடைய ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தினான்.*

*நேபுகாத்நேச்சார் தலைமையின் கீழ் கிமு 612-ல் பாபிலோனிய படை நினிவேயை வீழ்த்தியது. அசீரிய இராஜாக்களும் பிரதானிகளும் தங்களுடைய ஜீவனுக்காக ஓடிப்போனார்கள்; ஓடிப்போய் முதலில் ஆரானிலும் பின்பு கார்கேமிஷிலும் அடைக்கலம் புகுந்தனர். ஆனால், நேபுகாத்நேச்சார் அவர்களை பின்தொடர்ந்து ஆரானிலும் கி.மு. 609 கார்கேமிஷிலும் கி.மு. 606 அவர்களை துரத்தினான்.*

*தப்பியோடின அசீரிய இராஜா எகிப்திய இராஜாவான நேகோவிடம் உதவி நாடினான். எகிப்திய இராஜாவான நேகோ யூதாவை வீழ்த்த முயற்சி செய்த போது யோசியா இராஜாவால் எதிர்க்கப்பட்டான். இந்த யுத்தத்தின் போது யோசியா இராஜா தேசத்தை இழந்தது மாத்திரமல்ல,*

அவனும் மரித்து தன்னுடைய குமாரர்களுக்கு ராஜ்ஜியத்தை விட்டுப்போனான்.

தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகம் இல்க்கியாவால் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் (2 இராஜா 22-23) யோசியா இராஜா ஆவிக்குரிய சீர்த்திருத்தங்களை நிறுவியிருந்தார். ஆனாலும் அது அதிக நாள் நீடிக்கவில்லை. அவன் மரணத்திற்கு பின்னர் அந்த தேசம் மறுபடியும் விக்கிரக ஆராதனைக்கு திரும்பியது அதோடுகூட தங்களுடைய பொல்லாத வழிகளுக்கு மீண்டும் திரும்பினார்கள் (எரேமியா 22:13-19).

இப்படி பொல்லாத காரியங்கள் நடைபெறுவதை தேவன் கண்டுகொள்ளாமல் மௌனமாகவும், அந்த ஜனங்களை தண்டித்து அவர்களை நிர்மூலமாக்காமலும் இருப்பது ஆபகூக்கை தேவனிடம் கேள்வி கேட்க செய்தது (1:2–4).

## நோக்கம் :


கி.மு.722ல், வடக்கு சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டது; ஆனால் இன்னும் (கிமு 609 – கிமு 586) தேவனுடைய ஜனங்கள் யூதாவிலே இருந்தனர். அசீரியரை காட்டிலும் மிகவும் வலிமை பொருந்தின மோசமான பாபிலோனியர்களின் ஆதிக்கம் நேபுகாத்நேச்சாரின் ஆட்சியில் பெருகியது.

கர்த்தருக்கென்று உண்மையாய் இருக்கும் ஆபகூக் போன்றவர்கள் ஆண்டவரிடம் மீட்புக்காக ஜெபித்துக்கொண்டிருக்கும்- போது தேவன், தாம் பாபிலோனியர்களை ஓங்க செய்வதாக என்று பதிலளிக்கிறார். இந்த பதில் ஆபகூக் மற்றும் அவரைப்

*போன்றவர்களுக்கு ஒரு குழப்பத்தை (ஆச்சரியத்தை) விளைவித்தது.*

*ஆகவே, கர்த்தர் தாம் தெரிந்தெடுத்த ஜனங்களுக்கு என்ன செய்ய போகிறார் என்பதை குறித்து ஆபகூக் சிந்தனை பண்ண தொடங்கினார்.*

*தம்முடைய ஜனங்களுக்கு அந்த தேசத்தை அவர் கொடுக்கவில்லையோ??*
*அதை இப்போது திரும்ப எடுத்து கொள்வாரோ??*




*பேரழிவை சந்தித்து மீந்திருக்கும் தேவனுடைய ஜனங்களுக்கு ஆபகூக்கின் ஜெபம் உண்மையான விசுவாசத்திற்கும் அழியா நம்பிக்கைக்கும் ஒரு சிறந்த சாட்சியாக இன்றைக்கும் நிலைத்து நிற்கிறது.*

*இந்த புஸ்தகம் யூதா ஜனங்களுக்கோ தேசத்திற்கோ எதிரான தீர்க்கதரிசனம் அல்ல. மாறாக இந்த புத்தகம், தேவனுக்கும் ஆபகூக்கிற்கும் இடைய நடக்கும் ஒரு உரையாடலாகும்.*

- *ஆபகூக் ஆண்டவரிடம் இரண்டு கேள்விகளை கேட்கிறார்*
- *இரண்டிற்கும் ஆண்டவர் பதில் கொடுத்தார்.*
- *பின்னர் தேவன், தாம் கொடுக்கும் தரிசனத்தை எழுதும்படி ஆபகூக்கிற்கு சொல்கிறார்.*
- *அதோடுகூட பிரச்சனைகள் மத்தியிலும் தேவனை துதியின் விண்ணப்பத்தோடு ஆபகூக் இந்த புத்தகத்தை முடிக்கிறார்.*

**சுருக்கவுரை :**

*கர்த்தர் சில வேளைகளில் செயல்படாதது போல தோன்றினாலும், அவர் எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.*

*பாபிலோனியர்களை கொண்டு தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றினார் என்று வசனம் 1:12 கூறுகிறது. ஏனெனில், பாபிலோனியரும் அவருடைய ஆளுகைக்குள்ளேயே இருக்கிறார்கள்.*

*கர்த்தர் பரிசுத்தமானவர். தீமையை ஆண்டவரால் அங்கீகரிக்க இயலாது என்று ஆபகூக் வசனம் 1:13ல் கூறுகிறார்.*

*கர்த்தர் ஜெபத்தை கேட்டு அதற்கு பதிலளிப்பார்.*

*நாம் ஜெபிக்கும் பொழுது நாம் மனதில் நினைத்தபடி கர்த்தர் பதிலளிப்பாரென்று எதிர்பார்க்கிறோம். அவர் வேறுவிதமாய் பதில் கொடுத்தால், அவர் பதில் கொடுக்கவில்லை என்று நினைக்கிறோம். சில சமயங்களில் நம்முடைய ஜெபங்களுக்கு கர்த்தர் நாம் எதிர்பாராத பதிலை கொடுக்கிறார்.*

*கர்த்தர் நல்லவர் நீதியுள்ளவர். அவர் தீயவர்களுக்கு நீதி செய்து உத்தமர்களை குறித்து கரிசனையுள்ளவர்.*

*நீதிமான் விசுவாசத்தாலும் அதை அப்பியாசப் படுத்துவதாலும் பிழைப்பான். அப்படி என்றால், மெய்யாகவே கர்த்தர் நல்லவர் நீதியுள்ளவர் என்பதை விசுவாசித்து அதற்கேற்றபடி வாழ்வது.*

*இந்த புத்தகத்தின் ஆரம்ப வசனங்கள், ஆமோஸ் மற்றும் மீகாவின் நாட்களில் நடந்த காரியங்களை நமக்கு நினைவுபடுத்துகின்றன. அடிப்படையில், நீதி அந்த தேசத்திலிருந்து மறைந்துபோனது. வன்முறையும் பொல்லாப்பும் தடுக்க முடியாத அளவுக்கு அதிகமாக காணப்பட்டது.*

*இந்த இருண்ட நாட்களின் மத்தியில், இந்த தீர்க்கதரிசி ஒரு தெய்வீக இடைபடுதலுக்காக மன்றாடினார் (1:2–4). யூதாவை நியாயந்தீர்க்க கல்தேயரை அனுப்புவேன் என்பதே ஆண்டவருடைய பதிலாய் இருந்தது (1:5–11). இது ஆபகூக்கிற்கு இன்னும் பெரிய ஆவிக்குரிய குழப்பத்தை உண்டுபண்ணினது.*

*கர்த்தர் ஏன் தம் ஜனங்களை களையெடுத்து அவர்களுடைய நீதியை சரிக்கட்டாமல் இருக்கிறார்?*

தேவனுடைய ஜனங்கள் கல்தேயரை விட நீதிமான்கள்; அப்படியிருக்கும்போது தேவன் எப்படி கல்தேயரை கொண்டு தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்க்க முடியும்? (1:12–2:1)

இதற்கு கர்த்தருடைய பதில், கல்தேயரையும் நியாயந்தீர்ப்பேன் (2:2–20) என்பதே. இந்த பதில் தீர்க்கதரிசியின் குழப்பத்திற்கு திருப்தி அளிக்கவில்லை.

இறுதியில் ஆபகூக் புரிந்துகொண்டது என்னவென்றால், கர்த்தர் அருளிய தற்காலிக ஆசீர்வாதங்களுக்காக அவரை ஆராதிக்காமல், கர்த்தரை கர்த்தர் என்பதற்காகவே அவரை நாம் ஆராதிக்க வேண்டும் (3:17–19).

## புஸ்தகத்தின் சிறிய கண்ணோட்டம் :

### தீர்க்கதரிசியின் குழப்பம் *(1:2–2:20)*

### ஆபகூக்கின் முதல் புகார் *(1:2–4)*

ஆறு விதமான பிரச்சனைகளை பட்டியலிட்டிருக்கிறார் :

1. பாவம், *Sin*
2. பொல்லாப்பு / துன்மார்க்கம், *Wickedness*
3. அழிவு, *Destruction*
4. வன்முறை, *Violence*
5. நியாயஸ்தலங்களில் நீதி இல்லை, *No justice in the courts*
6. நீதிமான்களை காட்டிலும் தீயவர்கள் அதிகமாக உள்ளனர்.

நம்முடைய சமுதாயத்தை போல தோன்றுகிறது அல்லவா?

*ஆபகூக் ஒரு நல்ல கேள்வியை எழுப்பினார். வெளிநாடு சென்று பிரசங்கிக்கும் போது கேள்வி பதில் நேரங்களில் (sessions) வழக்கமாக ஜனங்கள் கேட்கும் ஒரு கேள்வி இதுதான்.*

- *துன்மார்க்கன் தண்டிக்கப்படாதது ஏன்?*
- *தீயவர்கள் செழிப்பாக இருப்பது ஏன்?*
- *ஆண்டவர் ஏன் எதுவும் செய்யாமல் இருக்கிறார் ?*

## **தேவனுடைய முதல் பதில்** *(1:5–11):*

*கர்த்தர் காரியங்களை செய்துகொண்டு தான் இருக்கிறார். யூதாவை அழிக்க அந்நிய தேசமான பாபிலோனியரை எழும்பி வர செய்கிறார். கர்த்தர் ஆபகூக்கிடம் "உனக்கு சொல்லியிருந்தால் நம்பியிருக்கமாட்டாய்" என்று கூறுகிறார். ஏன் நம்பியிருக்கமாட்டான் என்றால், பாபிலோனியர்கள் உண்மையாகவே துன்மார்க்கராய் இருந்தார்கள். யூதர்களை/அசீரியர்களை காட்டிலும் மிகவும் மோசமானவர்கள்.*

*தேவன் எப்பொழுதும் நாம் விரும்பியபடி அல்லது எதிர்பார்க்கிறபடி பதில்களை கொடுக்க மாட்டார். எப்படி நமது ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் தரவேண்டும் என்பதை எப்பொழுதும் நீங்கள் உங்களுடைய மனதில் தீர்மானித்து வைத்திருப்பீர்கள். ஆனால், அவர் வேறுவிதமாய் பதிலளித்தால், நீங்கள் அதை எப்படி ஏற்றுக்கொள்வீர்கள்?*

## *இரண்டாம் புகார் (1:12–2:1)*

*ஆபகூக் அந்த பதிலை ஏற்றுக்கொண்டாலும் அந்த பதில் அவருக்கு பிடிக்கவில்லை. கர்த்தர் என்றைக்கும் மாறாதவர் ஏனென்றால் அவர் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவரும் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணினவருமாயிருக்கின்றார்.*

*கர்த்தர் இஸ்ரவேலோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறபடியால் முழுவதுவாக அந்த ஜனங்களை அழிக்கமாட்டார் என்று ஆபகூக் அறிந்திருந்தார். அதனால் தான் "நாங்கள் சாக மாட்டோம்" என்று அவர் சொல்கிறார். ஆனால் தேவனோ, நிலைமை இன்னும் மோசமாக போகும் என்பதை சுட்டிக்காட்டுகிறார்.*

*பரிதாபப்படுதல், நம்பிக்கையற்ற வெறுப்பு மற்றும் தேவன் மீதான கோபம் ஆகிய இவைகளுக்கிடையே ஒரு சமநிலை இருக்கிறது. நாம் இந்த சூழ்நிலையில் செல்லும்போது இவைகளின் மையப்பகுதியில் தான் இருக்க வேண்டும். ஆபகூக் ஒரு பதிலை பெற்றுக்கொண்டார் ஆனால், அவரிடம் நிறைய கேள்விகள் இருந்தன.*

## தேவனுடைய இரண்டாம் பதில் *(2:2–20)*

*பாபிலோனியர்களை குறித்து கவலைப்படாதே அவர்களுக்குரிய தண்டனையை அவர்கள் பெற்றுகொள்வார்கள் என்று கர்த்தர் பதிலளிக்கிறார்.*

*ஆண்டவர் மீது விசுவாசத்தில் இருப்பது ஆண்டவருக்கு உண்மையாயிருப்பது என்று அர்த்தமல்ல. உதாரணத்திற்கு, ஒருவர் புகைப்பிடிப்பது நல்லதல்ல என்று அறிந்திருந்தும் அதை விடமுடியவில்லை என்றால் என்ன பிரயோஜனம். அப்படிப்பட்டவர்களுடைய இருதயத்தை நீங்கள் அறிந்திருந்தீர்களானால் தனக்கு ஒன்றும் ஆகாது என்று அவர்கள் நினைப்பதை உங்களால் கண்டுபிடிக்க முடியும் - விபத்து மற்றவர்களுக்குதான் நடக்கும் தனக்கு நடக்காது என்ற எண்ணம் கொண்டவர்கள்.*

- *பெருமை பாராட்டுபவர்களுக்கு ஐயோ 2:4-5*
  *Woe to the Proud*
- *பேராசைக்காரருக்கு ஐயோ 2:6-8*
  *Woe to the Greedy*
- *நேர்மையற்றவர்களுக்கு ஐயோ 2:9-11*
  *Woe to the Dishonest*
- *வன்முறைக்காரருக்கு ஐயோ 2:12-14*
  *Woe to the Violent*
- *சிற்றின்பத்தை (காமம் தொடர்பான) நாடுபவர்களுக்கு ஐயோ 2:15-17*
  *Woe to the Sensual*
- *விக்கிரகாராதனைக்காரருக்கு ஐயோ 2:18-20*
  *Woe to the Idolater*

## *தீர்க்கதரிசியின் ஜெபம் (3:1–19)*

***தேவனுடைய இரக்கத்திற்காக விண்ணப்பம் (3:1, 2)***
***தேவனுடைய வல்லைமைக்கான துதி (3:3–15)***
***கர்த்தர் போதுமானவர் என்கிற வாக்குத்தத்தம் (3:16–19)***

*இந்த மூன்றாம் அதிகாரம் ஒரு பாடலாக தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டது. கடைசியில் இதனுடைய ராகம் கொடுக்கப்பட்டுள்ளது.*

*சேலா என்கிற பதம் வேதாகமத்தில் சங்கீதத்தை தவிர இங்கு மட்டுமே பயன்படுத்தபட்டுள்ளது. சேலாவைக்குறித்த விரிவான செய்தி நமது சானலில் உள்ளது. இதனுடைய அர்த்தம் நாம் இதை தியானித்து அமர்ந்து நிதானமாய் அறிந்துகொள்ளவேண்டும் என்பதே.*

*நியாயத்தீர்ப்பின் மத்தியிலும் இரக்கத்திற்காக கெஞ்சுகிறார். (1-2).*

*நடக்கப்போகிற காரியம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்று அறிந்து பயந்தார்; என்னவெனில், சந்தேகமே இல்லை அவரும் இந்த பாடுகளை அனுபவிப்பார் என்பதையும் அறிந்திருந்தார்.*

*தேவனுடைய வல்லமையையும் மாட்சிமையையும் குறித்து பாடினார். (3-15).*

*தேவனுக்கு காத்திருப்பேன் என்று வாக்குபண்ணினார் (16-19).*

*வரப்போகிற காரியம் பயமுறுத்துகிறதாயிருந்தாலும் ஆபகூக் தம்மை ஒப்புக்கொடுத்து தேவன் மேல் நம்பிக்கை வைத்து காத்திருந்தார்.*

## ***முக்கிய வசனங்கள் :***

***ஆபகூக் 1:2,*** *"கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே!*

***ஆபகூக் 1:5,*** *"நீங்கள் புறஜாதிகளை நோக்கிப் பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்; விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன்.*

***ஆபகூக் 1:12,*** *"கர்த்தாவே, நீர் பூர்வகாலமுதல் என் தேவனும் என் பரிசுத்தருமானவர் அல்லவா? நாங்கள் சாவதில்லை."*

***ஆபகூக் 2:2-4,*** *" [2]அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. [3]குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை. [4]இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்*

***ஆபகூக் 2:20,*** *"கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது.. "*

***ஆபகூக் 3:2,*** *"கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமுண்டாயிற்று; கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும், கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்.*

***ஆபகூக் 3:19,*** *"ஆண்டவராகிய கர்த்தர் என்பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார். இது நெகிநோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்."*

## ***முடிவுரை:***

*ஆபகூக் தீர்க்கதரிசி எழுப்பும் கேள்விகள் யாவும் அடிப்படையில் ஜனங்கள் அனைவருக்கும் உள்ள கேள்விகள் தான். இந்த கேள்விகளுக்கான பதில்களில் தான், நாம் தேவனுடைய பண்புகளையும் அவருடைய மகத்துவமான வழிகளையும் எப்படி புரிந்துகொள்கிறோம் என்பதின் அஸ்திபாரம் இருக்கிறது.*

*ஆபகூக்கின் செய்தியினுடைய கருப்பொருள், "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"(2:4) என்கிற அவருடைய கூக்குரலில் அடங்கியிருக்கிறது.*

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் 10:38 இதே வசனத்தை மேற்கோள் காட்டி, பாடுகள் மத்தியில் விசுவாசிகள் யாவரும் உறுதியோடும் விசுவாசத்தோடும் இருப்பது அவசியம் என்ற கோணத்தில் ஒரு இறையியல் கருத்தை முன்வைக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் இதே வசனத்தை இரண்டுமுறை தனது கடிதத்தில் குறிப்பிட்டு, "விசுவாசத்தின் மூலம் நீதிமான் பிழைப்பான்" என்ற இறையியல் கருத்தை அழுத்தமாக பதிவுசெய்கிறார்.

- ரோமர் 1:17
- கலாத்தியர் 3:11

விசுவாசிப்பது என்றால் எதோ ஒருமுறை செய்யும் காரியம் அல்ல; அது தொடர்ந்து நடக்க வேண்டிய ஒரு வாழ்க்கை முறை. ஒரு உண்மையான விசுவாசி தேவனால் நீதிமான் என்று அழைக்கபட்டவன், தன் வாழ்நாள் முழுவதும் விடாமுயற்சியோடு முடிவுபரியந்தம் பாவத்தினால் வஞ்சிக்கப்படாதபடிக்கு விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொண்டிருப்பான் (கொலோசெயர் 1:22,23; எபிரெயர் 3:12–14). சர்வத்தையும் ஆளும் தேவனை அவன் விசுவாசிப்பான்; அவர் நீதியை மட்டுமே செய்வார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கும் அவருடைய ஆசீர்வாதத்திற்கும் உள்ள சம்பந்தத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

தேவ நியாயத்தீர்ப்பும் ஆசீர்வாதமும் ஒன்றுக்கொன்று எதிரானவை, இவ்விரண்டிற்கும் சம்பந்தம் இல்லை என்று

*பலர் நினைக்கிறார்கள். அதோடுகூட “எனக்கு அவ்வளவு நியாயத்தீர்ப்பு இல்லை, எனது எதிரிக்குத்தான் அதிக நியாயத்தீர்ப்பு” என்றும் நினைக்கிறார்கள். அதே வேளையில், தேவனுடைய ஆசீர்வாதங்களும் இரட்சிப்பும் தங்களுக்குரியது, இதற்கும் நியாயத்தீர்புக்கும் சம்பந்தம் இல்லை என்று நினைப்பதில் திருப்தியடைகிறார்கள். ஆனால் தேவ ஆசீர்வாதங்களும் தேவ நியாயத்தீர்ப்பும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்ற நிலைப்பாட்டிற்கு நான் வந்துவிட்டேன்.*

*கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை கொண்டு தேவன் நம்மை நமது எதிரிகளிடமிருந்து விடுவிக்கிறார். இறுதியில் மீதியான நீதிமானை தேவ நியாயத்தீர்ப்பு பரிசுத்தமாக்கும் (3:9).*

*தேவன் தமது நியாயத்தீர்ப்பை கொண்டே நமக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறார். அவர் நம்மோடு வாசம்செய்யும்படி துன்மார்க்கத்தை (துன்மார்க்கரை) அழிக்கிறார்.*

*துன்மார்க்கரை அவர் அழித்து அவர்களுடைய பொக்கிஷங்களை மீதியான நீதிமான்களுக்கு (His faithful remnant) அளிக்கிறார் (2:5-7, 9-10) துன்மார்க்கருக்கு வரும் நியாயத்தீர்ப்பின் முகாந்திரமே நமக்கு ஆசீர்வாதம்.*

*சீயோனுக்கு சொல்லப்பட்ட கடைசி ஆசீர்வாதங்களில் பல (3:14-20) இன்னும் காணப்படவில்லை ஆகவே, இவை கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு காத்திருக்கும் மேசியாவின் தீர்க்கதரிசனங்கள் என்று நாம் அறிந்துகொள்கிறோம். கிறிஸ்து தமது ஜனத்திற்காக*

*இம்மண்ணில் தோன்றி மரித்ததன் மூலம் தேவன் நமது ஆக்கினைகளை அகற்றினார் (செப் 3:15; யோவான் 3:16). ஆனால் இஸ்ரவேலோ தங்களுடைய உண்மையான மேசியாவை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. வரும் காலங்களில் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டியதே (ரோமர் 11:25-27).*

*இஸ்ரவேலின் சமாதானமும் பாதுகாப்பும் அவர்களுடைய ராஜா அவர்கள் நடுவில் இருக்கும்போது காணப்படும். கிறிஸ்து இவ்வுலகை நியாயந்தீர்க்க வந்து (இரண்டாம் வருகை), இஸ்ரவேலை மீட்கும்போது இவை நிறைவேறும். தாம் உயிர்த்தெழுந்தபின் எப்படி பரலோகத்திற்கு ஏறினாரோ அப்படியே திரும்ப வருவார்; வந்து பூமியில் புதிய எருசலேமை ஸ்தாபிப்பார் (வெளி 21). அப்பொழுது, இஸ்ரவேலை குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்.*

## **இன்றைய பயன்பாடு:**

1. *நாம் தேவனிடம் கேள்வி கேட்க அனுமதி உண்டு; ஆனால் நாம் பயபக்தியோடு (with respect and reverence) கேட்க வேண்டும். சில வேளைகளில் நாம் கடினத்தின் பாதைகளில் செல்லும்போது அதை புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலைகள் நமக்கு வரலாம். தேவனுக்காக வைராக்கியம் பாராட்டுகிற நாம் கஷ்டத்தில் செல்லும்போது, நமக்கு தீங்கு நினைத்தவர்கள் செழிப்பாக வாழலாம்.*

2. *தேவன் சர்வத்தையும் ஆளுகிறவர், சர்வ வல்லவர் என்பதை நமக்கு ஆபகூக்கின் புத்தகம் தெளிவுபடுத்துகிறது. நாம் அமர்ந்திருந்து அவர் காரியங்களை செய்கிறார் என்று அறிந்துகொள்ள வேண்டும். அவர் தம்மைக்குறித்து கூறியவை அனைத்தும் உண்மையே; தம்மை யார் என்று வெளிப்படுத்தினாரோ, அவர்தான் அவர்; அவர் வாக்குமாறாதவர். துன்மார்க்கரை கண்டிப்பாக நியாயம் தீர்ப்பார். நம்மால் பார்க்க முடியாவிட்டாலும், அண்டசராசரங்களின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர் அவரே.*

3. *"**ஆண்டவராகிய கர்த்தர் என்பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான***

**ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்.**" (**ஆபகூக்** *3:19*). நம்முடைய கவனம் இந்த வசனத்தில் எப்போதும் இருக்க வேண்டும். நம்மை இந்த உலகத்தின் பாதைகளிலிருந்து பிரித்தெடுத்து, மேலான ஸ்தலங்களில் அவரோடு நடக்க செய்கிறார்.

*We need to stay focused on this: "**The Sovereign Lord is my strength; He makes my feet like the feet of a deer, he enables me to go on the heights** "(**Habakkuk 3:19**). Enabling us to go on the heights is taking us to the higher places with Him where we are set apart from the world.*

4. சில வேளைகளில் நாம் செல்ல வேண்டிய பாதை கஷ்டங்களும் துயரங்களும் நிறைந்த பாதையாக இருக்கலாம். ஆனால் அவரில் தங்கி, அவரை விசுவாசித்து நாம் நடக்கும்போது, இறுதியில் அவர் விரும்பும் இடத்தை நாம் சென்றடைகிறோம்.

   *Sometimes the way we have to go to get us there is through suffering and sorrow, but if we rest in Him and trust Him, we come out where He wants us.*

5. ஆபகூக்கின் செய்தி நமக்கு ஆறுதல் தருகிறது. ஏனெனில், நாம் துன்மார்க்கமான சமூகத்தில்

வாழ்கிறோம். நாம் ஆபகூக் எழுதினதை பின்னோக்கி பார்த்து, நாம் உண்மையாகவே தேவனுடைய ஆளுகைக்குள் இருக்கிறோம் என்று நாம் உணர முடியும். பாபிலோனுக்கு சிறைபட்டு சென்றபொழுதிலும், நீதிமான்களை தேவன் பாதுகாத்தார் (தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்-நேகோ). இறுதியில் அவர்களை சொந்த தேசத்திற்கு அழைத்து வந்தார். ஆகவே, தேவன் மேல் உள்ள உங்களது விசுவாசம் இந்த தீர்க்கதரிசனங்களாலும் வரலாற்றில் நடந்தவைகளாலும் இன்னும் ஸ்திரப்பட்டு, தேவனுடைய வார்த்தை உண்மையானவை என்று உறுதிப்படுத்தட்டும்.

*The message of Habakkuk is very comforting to us because we live in a wicked society. We can look back at what Habakkuk wrote, see that it came true, that God really is in control, that God did protect the righteous even though they went to Babylon (eg. Daniel, Shadrack, Meshack and Abednego) and He eventually brought them back to the land. Therefore, your faith in God can be bolstered by the prophecy and historical events that show God's word is true.*